# ஆகஸ்ட் - 16- புதன்
## புனித கங்கேரி இஸ்தோவான்

**அனைத்துலகோரே! கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள் திபா. 66:1**

**முதல் வாசகம்: இணைச்சட்டம் 34: 1- 12**

அதன்பின், மோசே மோவாபுச் சமவெளியிலிருந்து எரிகோவுக்குக் கிழக்கே நெபோ மலையில் உள்ள பிஸ்காவின் உச்சிக்கு ஏறிச் சென்றார். ஆண்டவர் அவருக்குத் தாண் வரையில் உள்ள கிலயாது நாடு முழுவதையும் காட்டினார்.மேலும் நப்தலி முழுவதையும் எப்ராயிம் நிலப்பகுதியையும், மனாசே நிலப்பகுதியையும் யூதாவின் நிலப்பகுதி முழுவதையும், மேற்கே மத்தியதரைக் கடல் வரையிலும் காட்டினார். மற்றும் நெகேபையும் பேரீச்சை மாநகராகிய எரிகோ முதல் சோவார் வரையிலும் உள்ள நிலப்பரப்பையும் காட்டினார்.அப்போது ஆண்டவர் மோசேக்கு உரைத்தது "நான் உன் வழிமரபினருக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாம்,ஈசாக்கு யாக்கோபு ஆகியோருக்கு ஆணையிட்டுக் கூறிய நிலம் இதுவே. உன் கண்களால் நீ அதைப் பார்க்கும்படி செய்துவிட்டேன். ஆனால் நீ அங்கு போகமாட்டாய்".எனவே, ஆண்டவர் கூறியபடியே, அவர்தம் ஊழியர் மோசே மோவாபு நாட்டில் இறந்தார்.மோவாபு நாட்டில் பெத்பகோருக்கு எதிரே உள்ள பள்ளத்தாக்கில் அவர் அவரை அடக்கம் செய்தார். ஆனால் இன்றுவரை எந்த மனிதருக்கும் அவரது கல்லறை இருக்குமிடம் தெரியாது. மோசே இறக்கும் போது அவருக்கு வயது நூற்றிருபது. அவரது கண்கள் மங்கினதுமில்லை அவரது வலிமை குறைந்ததுமில்லை.மோவாபுச் சமவெளியில் இஸ்ரயேல் மக்கள் மோசேக்காக முப்பது நாள்கள் துக்கம் கொண்டாடினர். மோசேக்காக இஸ்ரயேல் மக்கள் அழுது துக்கம் கொண்டாடின நாள்கள் நிறைவுற்றன.நூனின் மகனாகிய யோசுவாவின் மேல் மோசே தம் கைகளை வைத்ததால், அவர் ஞானத்தின் ஆவியால் நிரப்பப் பெற்றிருந்தார். இஸ்ரயேல் மக்கள் யோசுவாவுக்குச் செவிகொடுத்து, மோசேக்கு ஆண்டவர் கட்டளையிட்டபடி நடந்தார்கள்.ஆண்டவர் நேருக்குநேர் சந்திக்க மோசேயைப்போல், இறைவாக்கினர் வேறெவரும் இஸ்ரயேலில் இதுகாறும் எழுந்ததில்லை. ஏனெனில். எகிப்து நாட்டில், பார்வோனுக்கும், அவன் அலுவலருக்கும், அவன் நாடு முழுவதற்கும் அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் செய்யும்படி ஆண்டவர் மோசேயை அனுப்பினார்.இஸ்ரயேலர் அனைவரின் கண்கள் காணுமாறு அவர் ஆற்றிய அனைத்து ஆற்றல்மிகு செயல்களும் அச்சுறுத்தும் மாபெரும் செயல்களுமே இதற்குச் சான்றாகும்.

**பதில்பாடல் :** நம்மை உயிர்வாழச் செய்த இறைவா போற்றி

**நற்செய்தி : மத்தேயு 18 : 15 – 20**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களிடம் கூறியது: "உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால் நீங்களும் அவரும் தனித்திருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக்காட்டுங்கள். அவர் உங்களுக்குச் செவிசாய்த்தால் நல்லது உங்கள் உறவு தொடரும். இல்லையென்றால்" இரண்டு அல்லது மூன்று சாட்சிகளுடைய வாக்குமூலத்தால் அனைத்தும் உறுதி செய்யப்படும்" என்னும் மறைநூல் மொழிக்கு ஏற்ப உங்களோடு ஒன்றிரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு போங்கள்.அவர்களுக்கும் செவிசாய்க்காவிடில் திருச்சபையிடம் கூறுங்கள். திருச்சபைக்கும் செவிசாய்க்காவிடில் அவர் உங்களுக்கு வேற்று இனத்தவர் போலவும் வரிதண்டுபவர் போலவும் இருக்கட்டும்.மண்ணுலகில் நீங்கள் தடைசெய்பவை அனைத்தும் விண்ணுலகிலும் தடைசெய்யப்படும் மண்ணுலகில் நீங்கள் அனுமதிப்பவை அனைத்தும் விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார்.ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்."

**தியானம்:** உறவுக்கு முக்கியத்துவம் கொடுத்த இயேசு, உறவு இல்லாமல் வாழ்வு இல்லை என்பதை இயேசு நற்செய்தியில் சுட்டிக் காட்டுகின்றார். உறவில் விரிசல் விழுகின்றபோது அந்த விரிசலை சரிசெய்ய எல்லாவித முயற்சிகளையும் நாம் எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். விரிசலை அதிகப்படுத்துகின்ற செயல்களை நாம் செய்ய கூடாது எனவும் சுட்டிக்காட்டுகின்றார். யாராவது நமக்கு எதிராக தவறு செய்தால் முதலில் நமக்குள்ளாகவே புரிந்துகொண்டு நம் உள்ளத்தைக் காயப்படுத்திக்கொண்டிருக்க கூடாது. அதை சரி செய்வதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். முதலில் நாமாக சென்று சீர் படுத்துவதற்கான முன்னெடுப்புக்களை முயற்சிக்க வேண்டும். இந்த உலகத்தில் இருக்கின்ற மனிதர்கள் அனைவரும் தனித்தனமை வாய்ந்தவர்கள். சிந்திக்க கூடிய ஆற்றல் மிக்கவர்கள், கருத்துக்களை வெளிப்படுத்தும் திறன் வாய்ந்தவர்கள். இப்படியான பல கருத்துவேறு பாடுகள் வர காரணமாகின்றது. ஒருவர் மற்றவருடைய கருத்துக்ளை ஏற்றுக்கொண்டு விரிசல்களை சரி செய்ய நாம் முன்வரவேண்டும். ஏனென்றால் உறவுதான் வாழ்வின் ஆணிவேர். அத்தகைய உறவுக்கு நமது வாழ்வில் முதலிடம் கொடுக்கவேண்டும் என்பது இயேசுவின் விருப்பம் ஆகும். அதை நம் வாழ்வில் ஏற்றுவாழ்வோம் ஆமென்.